# அறிவைத் தேடி நீங்கள் அலைய வேண்டாம், அறிவு உங்களைத் தேடிவரும்’ - முதலமைச்சர்!

தி.மு.க. எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ அப்போதெல்லாம் தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழ்ப் பண்பாட்டின் வளர்ச்சிக்கும் என்னென்ன காரியங்களைச் செய்ய முடியுமோ அத்தனைக் காரியங்களையும் செய்யும். 1989இல் கலைஞர் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்தபோது, ‘தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சகம்’ஒன்றைத் தொடங்கி, அதற்கென்று ஒரு அமைச்சரையும் நியமித்தார்.

2021இல் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றதும், முதலமைச்சரின் முதன்மையான கவனத்தில் இருக்கிற துறையாக இருப்பது தமிழ் மொழி வளர்ச்சி, தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சி, அறிவுசார் துறைதான். தமிழ்ச் சமூகத்தை அறிவில் சிறந்த சமூகமாக மாற்ற எந்தெந்த வழிகள் இருக்கின்றன என்பதை அறிந்து அந்தந்த வழிகளில் திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகிறார்.


பள்ளிக்கல்வித் துறை, நூலகத் துறை ஆகிய இரு துறைகளையும் இணைத்துத் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் வருடந்தோறும் புத்தகக் கண்காட்சியை நடத்திவருகிறார். அந்தந்த மாவட்டங்களிலுள்ள எழுத்தாளர்களை, கலைஞர்களை, பல்துறை சார்ந்த அறிஞர்களை,புத்தகக் கண்காட்சிக்கு அழைத்து, பேச வைக்க வேண்டும், பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் புத்தகக் கண்காட்சிக்கு வந்து பார்வையிட வேண்டும், பொது மக்களும் திரளாக வர வேண்டும் என்று கூறினார். ‘புத்தகங்கள் கிடைக்கவில்லை, புத்தகங்களை வாங்க முடியவில்லை’ என்ற நிலைமைகளைப் போக்கி, எளிதாகப் புத்தகங்களை வாங்கவும், தேவையான புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கவும், லட்சக்கணக்கான புத்தகங்களைப் பார்வையிடவும் வைத்தார். இதன் மூலம் பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்களிடையே படிக்கிற பழக்கத்தை ஏற்படுத்தினார்.

**படிக்க வைப்பதன் மூலமாகத்தான், படிப்பதன் மூலமாகத்தான் தமிழ்ச் சமூகத்தை அறிவிற் சிறந்த சமூகமாக, பண்பாட்டில் சிறந்த சமூகமாக மாற்ற முடியும் என்று முதலமைச்சர் நம்புகிறார். அதனால்தான், ‘அறிவைத் தேடி நீங்கள் அலைய வேண்டாம், அறிவு உங்களைத் தேடி வருகிறது’ என்ற வாசகத்தைச் சொன்னார். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் அரசே மாவட்டந்தோறும் புத்தகக் கண்காட்சியை இன்றுவரை நடத்தியதில்லை. தமிழ்நாட்டில் மட்டும்தான் இது நடக்கிறது.**

**தமிழ்நாட்டின் வரலாற்றில் எழுத்தாளர்களை, கலைஞர்களை, பல்துறை சார்ந்த அறிஞர்களை அழைத்தது, புத்தகக் கண்காட்சியில் பேச வைத்தது, கண்ணியமாக நடத்தியது, கௌரவமான தொகையைக் கொடுத்ததெல்லாம் தமிழ் எழுத்தாளர்கள் இதுவரை பெற்றிராத அரசு கௌரவம்.**

தமிழ்நாட்டை ஐந்து மண்டலங்களாகப் பிரித்து, சென்னையில் ‘சென்னை இலக்கியத் திருவிழா’, திருச்சியில் ‘காவேரி இலக்கியத் திருவிழா’, மதுரையில் ‘வைகை இலக்கியத் திருவிழா’, திருநெல்வேலியில் ‘பொருநை இலக்கியத் திருவிழா’, கோவையில் ‘சிறுவாணிஇலக்கியத் திருவிழா’ என்று தமிழக அரசு ஏற்பாடு செய்து நடத்தியது. இந்த இலக்கியத் திருவிழாக்களிலும் புத்தகக் கண்காட்சி அமைத்து, எழுத்தாளர்கள், கலைஞர்கள், பல்துறை அறிஞர்களை வரவழைத்துப் பேசவைத்தது.தொடர்ந்து இலக்கியத் திருவிழாக்கள், தமிழ்நாடு அரசால் நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு, பொருட்காட்சிகளை நடத்தவில்லை, புத்தகக் கண்காட்சிகளை நடத்திக்கொண்டிருக்கிறது. மற்ற மாநில அரசுகளின் செயல்பாடுகளுக்கும், தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளுக்குமுள்ள வேறுபாடு, ‘அறிவைப் பெறுவோம், அறிவால் உயர்வோம்’ என்பதுதான். இதுவே முதலமைச்சரின் கொள்கை முழக்கமாகவும் இருக்கிறது.

மாவட்டந்தோறும் புத்தகக் கண்காட்சி, ஐந்து மண்டலங்களில் இலக்கியத் திருவிழாக்கள் நடத்துவது என்பதோடு‘சென்னை சர்வதேசப் புத்தகக் கண்காட்சி’யும் தமிழ்நாடு அரசு கடந்த நான்கு ஆண்டுகளாக நடத்திவருகிறது. உலக அளவில் நடத்தப்படுகிற புத்தகக் கண்காட்சிகளுக்கு இணையாக ‘சென்னைசர்வதேசப் புத்தகக் கண்காட்சி’ நடைபெற்று வருகிறது. ‘தமிழ் அறிவு உலகிற்கும், உலக அறிவு தமிழ்நாட்டிற்கும்’ என்ற முழக்கத்துடன் இந்தப் புத்தகக் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. உலகிலுள்ள பல்வேறு பதிப்பாளர்களை வரவழைத்து, இந்தியாவில் இருக்கிற பிற மாநிலப் பதிப்பாளர்களை வரவழைத்து, தமிழ்நாட்டிலுள்ள பதிப்பாளர்களுடன் சந்திக்க வைப்பதுதான் இந்த ‘சென்னை சர்வதேசப் புத்தகக் கண்காட்சி’யின் நோக்கம். இந்தியா, உலகப் பதிப்பாளர்களின் சந்திப்பின் போது தமிழ் மொழியிலிருந்து பிற மொழிகளுக்குத் தமிழ் நூல்களை மொழிபெயர்க்கவும்,பிற மொழிகளிலிருந்து தலைசிறந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கவும், ஒப்பந்தம் செய்துகொள்ளும்பட்சத்தில்,ஒப்பந்தம் செய்யப்பட்ட நூலுக்கு தமிழ் நாடு அரசு நிதி நல்கை வழங்குகிறது.



இதுவரை தமிழ்நாட்டிலுள்ள எழுத்தாளர்களின் முயற்சியால்தான் பிற இந்திய மொழிகளிலும் வெளிநாட்டிலுள்ள மொழிகளுக்கும் மொழிபெயர்ப்பு நடை பெற்றது, அதுவும் சிறிய அளவில்தான். ஆனால், இப்போது தமிழ் நாடு அரசே மொழியாக்கப் பணிக்கு நிதிநல்கை வழங்குவதால் ஒரே ஆண்டில் தமிழிலிருந்து பல நூறுநூல்கள் மற்ற இந்திய மொழிகளிலும்,உலக மொழிகளிலும் எளிதாக மொழியாக்கம் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஒரே ஆண்டில் இந்திய, உலக மொழியிலுள்ள நூற்றுக்கணக்கான நூல்கள் தமிழ் மொழியில் மொழியாக்கம் செய்யப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. ‘என்னுடைய நூல்கள் பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவில்லை’ என்ற எழுத்தாளர்களுடைய மனக்குறை போக்கப்பட்டுள்ளது. பதிப்பாளர்களுக்கும் ஊக்கமளிக்கிற திட்டம்தான் இது.

சென்னை சர்வதேசப் புத்தகக் கண்காட்சியில் செய்துகொள்ளப்படும் மொழியாக்கப் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது வியாபாரம் சம்பந்தப்பட்டது, புத்தக விற்பனை சம்பந்தப்பட்டது அல்ல, கலாச்சாரப் பரிமாற்றம், அறிவு பரிமாற்றம், பண்பாட்டு பரிமாற்றம் சம்பந்தப்பட்டது. தமிழ்ச் சமூகம் உலக அறிவை, கலாச்சாரத்தை, பண்பாட்டை அறியும் போதுதான் அது தன்னை வளர்த்துக் கொள்ளும், புதுப்பித்துக்கொள்ளும், உலக சமுதாயத்தோடு போட்டிப் போட்டு வளரும் என்ற புரிதலின் அடிப்படையில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் சென்னை சர்வதேசப் புத்தகக் கண்காட்சியை நடத்திக்கொண்டிருக்கிறார். இந்தியாவிலுள்ள எந்த ஒரு மாநிலத்திலும் இப்படி ஒரு சர்வதேசப் புத்தக் கண்காட்சியை நடத்துவதில்லை. அது தமிழ்நாட்டில் மட்டும்தான் நடக்கிறது. அதுவும் ஸ்டாலின் ஆட்சியில் மட்டும்தான் நடக்கிறது.



எழுத்தாளர்
இமையம்

தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு பேருந்து நிலையத்திலும் ஒரு புத்தகக் கடையை தமிழ்நாடு அரசு திறந்துள்ளது. தமிழ்நாட்டில் இருக்கிற பெரிய கோவில்களிலும் புத்தகக் கடையைத் திறந்துள்ளது. இலக்கியம், அறிவியல், வரலாறு, தத்துவம் சார்ந்த புத்தகங்களை மட்டும்தான் படிக்க வேண்டும் என்று கட்டாயமில்லை. சமய நூல்களையும் பக்தி இலக்கியங்களைப் படிக்க விரும்பினாலும் அதற்கான ஏற்பாடுகளையும் தமிழ்நாடு அரசு செய்துள்ளது. ‘எதைப் படிக்க விரும்புகிறீர்களோ, அதை படியுங்கள். அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் நான் செய்துதருகிறேன். எக்காரணம் கொண்டும் படிக்காமல் மட்டும் இருந்துவிடாதீர்கள்’ என்பதுதான் முதலமைச்சரின் வேண்டுகோளாக இருக்கிறது.

‘எல்லா தளங்களிலும் தமிழ்ச் சமூகம் அறிவில் சிறந்த சமூகமாக இருக்க வேண்டும், தமிழ்ச் சமூகத்தை அறிவில் சிறந்த சமூகமாக மாற்றுவதே என் வாழ்நாளின் பெரும் கனவு’ என்று தமிழ்நட்டின் முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். அவருடைய அறிவிப்பு வெறும் அரசியல் கோஷமல்ல என்பதற்கு சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில், பெரும் தொகையான பயணிகள் வந்துபோகிற இடத்தில், ‘புத்தகப் பூங்கா’ என்றபுத்தகக் கடையை, 2025,ஜுன் 10ஆம் தேதி திறந்துவைத்தார். இரயிலில் பயணம் செய்கிற பயணிகள் தங்களுடைய நேரத்தை செல்போன் பார்ப்பதில் வீணடிக்கக் கூடாது, புத்தகங்களைப் படிப்பதில் செலவழிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கம்தான்.

**கலைஞர் சென்னையில், ‘அண்ணா நூற்றாண்டு நூலக’த்தைக் கட்டினார். ஆசியக் கண்டத்திலேயே பெரிய நூலகம். முதல்வர் ஸ்டாலின் மதுரையில் ‘கலைஞர் நூற்றாண்டு நூலக’த்தைக் கட்டினார். இந்த நூலகத்திற்குச் சராசரியாக நாள் ஒன்றுக்கு இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் வருகின்றனர். கோவையில் பெரியார் பெயரில் நூலகம் கட்டப்பட்டு வருகிறது. புத்தகத்தையும் நூலகத்தையும் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கு அருகிலும் கொண்டுபோய் சேர்ப்பேன் என்ற பெருங்கனவோடு செயல்படுகிற முதலமைச்சர், தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மனிதனையும் படிக்க வைக்க விரும்புகிறார். ஒவ்வொரு மனிதனும்உலக அறிவைப் பெற வேண்டும் என்று விரும்புகிறார். அறிவுசார் துறையில் அவர் காட்டுகிற அக்கறை புதுமையானது. “தமிழ்நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதனையும் கைத்தூக்கிவிடுவதுதான் என் ஆட்சியின் நோக்கம்” என்று முதலமைச்சர் அறிவித்திருக்கிறார்.**

தமிழ்நாட்டில் இருக்கிற 100 பேரூராட்சிகளையும் நகராட்சிகளையும் தேர்ந்தெடுத்து அறிவுசார் மையங்களை உருவாக்கியுள்ளார். ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.3.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த அறிவுசார் மையங்களில் TNPSC, MRB, TRB மட்டுமல்ல, UPSC தேர்வு எழுத விரும்புகிற இளைஞர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கிற இடமாகவும் படிப்பதற்கான இடமாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் கிடையாது. அறிவுசார் மையத்தில் மட்டுமல்ல, ‘நான் முதல்வன்’ திட்டத்திலும் UPSC படிக்க விரும்புகிறவர்களுக்குப் பயிற்சி, தங்குமிடம், உதவித் தொகை என்று தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தால் தமிழ்நாட்டு மாணவர்கள் ஒன்றிய அரசுப் பணிகளில் அதிகம் சேர்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் நமக்குத் தெரியவருவது, தமிழ்நாட்டிலுள்ள குழந்தைகள்முதல் வயதானவர்கள்வரை எல்லாரையும் படிக்கவைக்க விரும்புகிறார் முதல்வர் என்பதுதான். இளைஞர்களை பகல் கனவுகளைக் காணச் சொல்லவில்லை, படிக்கச் சொல்கிறார். அதற்காக நேரத்தைச் செலவிடச் சொல்கிறார் முதலமைச்சர்.

தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் 2021வரை பள்ளி மாணவர்களுக்கான பாடநூல்களைத் தயாரித்துத் தரும் நிறுவனமாக மட்டும்தான் செயல்பட்டு வந்தது. கலைஞர் முதலமைச்சராக இருந்த போதுதான் பாட நூல் கழகத்தின் மூலம், பாடநூல்களைத்தவிர்த்து, பிறதுறைசார்ந்த 76 நூல்களையும் வெளியிட்டார். மு.க. ஸ்டாலின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு பாடநூல் கழகத்தின் முகத்தையே மாற்றிவிட்டார். தமிழ் இலக்கிய நூல்களையும், பிற அறிவு சார்ந்த நூல்களையும் ஒவ்வொரு ஆண்டும் வெளியிட்டுவருகிறார். நான்கு ஆண்டுகளில் மட்டும் 600க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார்.

நூற்றாண்டு காணும் இலக்கிய ஆளுமைகளான கு. அழகிரிசாமி, கி. ராஜநாராயணன், கலைஞர் ஆகியோரின் சிறப்புத் தொகுப்பு நூல்களையும் வெளியிட்டார். சென்னை சர்வதேசப் புத்தகக் கண்காட்சியில் நிதிநல்கை (500 - பிரதிகளுக்கு) பெற்று, மொழிபெயர்ப்பு செய்யப்படும் அத்தனை நூல்களின் பின் அட்டைப்படமாக, தமிழ்நாடு பாடநூல் கழக அடையாளம் இருக்கும். நூறு, இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்டு மறுஅச்சு காணாத அரிய நூல்களையெல்லாம் வெளியிட்டு வருகிறார்.

தரமணியில் ரோஜா முத்தையா நூலகத்திற்கு அரசு இடத்தில் கட்டடம் கட்டிக்கொள்வதற்கு 3000 சதுர அடிகள் இடமும் தந்து, 4 கோடி ரூபாய் நிதி உதவியும் அளித்துள்ளார். அதற்கு ‘தமிழ் அறிவு வளாகம்’ என்ற பெயரையும் சூட்டி, தமிழ்ப் பண்பாட்டு அறிவுக் களஞ்சியமாக இந்நூலகம் திகழும் என்று உறுதியும் அளித்துள்ளார். இந்தச் செயல்பாடுகளுக்கெல்லாம் அடிப்படையாக இருப்பது, ‘சிறு வாய்ப்புக் கிடைத்தால்கூட, அந்த வாய்ப்பினைத் தமிழ்நாட்டு மக்கள் படிப்பதற்காக மட்டுமே பயன்படுத்துவேன்’ என்ற முதலமைச்சரின் நோக்கம்தான் காரணம். ‘ஒரு மனிதனுக்குக் கல்வி மட்டும் கிடைத்துவிட்டால், அவனுக்குச் சமூகத்தில் எல்லாம் கிடைத்துவிடும் என்பது எனக்குத் தெரியும். அதற்காகவே நான் உழைத்துக்கொண்டிருக்கிறேன் என்று முதலமைச்சர் சொன்னது புனைகதை அல்ல, அறிவியல் உண்மை.’

தமிழ்நாட்டில் இருக்கிற எழுத்தாளர்களை, மொழியியல் அறிஞர்களை, பல்துறை சார்ந்த அறிஞர்களைப் போற்றுவது, ஊக்குவிப்பது, அவர்கள் கௌரவமாக வாழ்வதற்கு உதவுவது என்ற நோக்கில் கடந்த நான்கு ஆண்டுகளாக, ஆண்டுக்குப் பத்துப் பேர் என்ற அளவில் மாநில அளவில்,தேசிய, உலக அளவில் விருதுபெற்ற எழுத்தாளர்களுக்கு ‘கலைஞர் கனவு இல்லம்’ என்ற பெயரில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் வீடு வழங்கிவருகிறார். அந்தந்த எழுத்தாளர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் விரும்புகிற ஊரில், நகரத்தில் வீடு ஒதுக்கப்படுகிறது. தேவைப்பட்டால் வீடு கட்டியும் தரப்படுகிறது.கடந்த ஆண்டிலிருந்து மொழிபெயர்ப்புக்காக சாகித்ய அகாடமி விருது பெற்றவர்களுக்கும் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தின் கீழ் வீடு வழங்கிவருகிறார். இது இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களில் நடைமுறையில் இல்லாத, உலக அளவில்கூட இல்லாத திட்டமாகும்.

எழுத்தாளர்களை, கலைஞர்களை, பல்துறை சார்ந்த அறிஞர்களைப் போற்றாத சமூகம், அறிவில், பண்பாட்டில், கலாச்சாரத்தில் மேம்பட்ட சமூகமாக இருக்க முடியாது என்பதை ஆழமாக உணர்ந்துதான் இத்திட்டத்தைத் தமிழ்நாட்டின் முதலமைச்சர் நிறைவேற்றி வருகிறார். இதனால்தான் இந்தியாவிலுள்ள முதலமைச்சர்களிலேயே தமிழ்நாட்டின் முதலமைச்சர் தனித்துத் தெரிகிறார். அண்மையில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மாணவர்களிடையே பேசும்போது, ‘புத்தகத்தை மட்டும் இறுகப் பற்றிக் கொள்ளுங்கள். அது மட்டுமே உங்களை உயர்த்தும்’ என்று கூறினார். புத்தகத்தைவிட சிறந்த பொருள் உலகத்தில் வேறு என்ன இருக்கிறது?

**‘எல்லாருக்கும் எல்லாம்’, ‘யாவும் பொது’, ‘அனைவருக்கும் அனைத்தும்’, ‘எல்லார்க்கும் எல்லாம்’என்பவைதான் தமிழ்நாட்டின் முதலமைச்சரின் பிரதானமான கொள்கை முழக்கம். அறிவை, கல்வியை எல்லோருக்கும் கிடைக்கச் செய்வது என்ற லட்சிய நோக்கத்தின் அடிப்படையில் அவர் நிறைவேற்றிவரும் திட்டங்களில் சிலவற்றை மட்டும்தான் பட்டியலிட்டிருக்கிறேன். அறிவுத் தளத்தில் இதுவரை ஸ்டாலின் செய்துள்ள காரியங்கள் எதுவும் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றதல்ல, இக்காரியங்கள் எதுவும் ‘வாக்கு’ அரசியலுக்காகச் செய்யப்பட்ட தல்ல. ‘நான் முதல்வன்’, ‘புதுமைப் பெண் திட்டம்’, ‘தமிழ்ப் புதல்வன்’ போன்ற திட்டங்கள் அரசியல் லாபத்திற்காகக் கொண்டுவந்ததல்ல. இத்திட்டங்கள் இந்தியாவிலுள்ள பிற மாநிலங்கள் பின்பற்றக்கூடிய முன்னோடி திட்டமாக இருக்கிறது என்பதை உலகம் அறியும்.**

கலைஞர் தன்னுடைய சொந்த பணத்திலிருந்து செம்மொழி விருதுகளை வழங்கச் செய்தார். ஆண்டுதோறும் ‘கலைஞர் பொற்கிழி’ விருது வழங்குவதற்கான வைப்புத் தொகையையும் தந்தார். பபாசியால் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்ப் பண்பாட்டை வளர்க்க, 2008இல் ‘சென்னை சங்கமம்’ என்ற ஒரு பெரிய நிகழ்வை நடத்தினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சரான பிறகுதான் பல ஆண்டுகளாகக் கொடுக்கப்படாமல் இருந்த செம்மொழி விருதுகளை வழங்கினார். அதோடு, ‘தகைசால் தமிழர்’ விருது ஒன்றைப் புதிதாக அறிவித்துக் கடந்த நான்கு ஆண்டுகளாக வழங்கிவருகிறார். ‘புதியன விரும்பு’ என்ற பெயரில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குக் கலை, இலக்கியப் பயிலரங்குகளையும் தமிழ்நாடு அரசு நடத்திவருகிறது. தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தலைச்சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து வெளிநாட்டு அறிவியில் ஆய்வுக்கூடங்களையும் ஆராய்ச்சி மையங்களையும் பார்வையிடுவதற்காக கல்வி சுற்றுலா திட்டத்தை நடைமுறைப்படுத்திவருகிறார். கடந்த நான்காண்டுகளாகப் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தலைமையில் மாணவர்கள் சுற்றுலா சென்றுவருகின்றனர். (சிங்கப்பூர், தென்கொரியா, ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளுக்குச் சென்றுவந்துள்ளனர்.) மொழி, பண்பாடு, கல்வித் துறையில் முதலமைச்சர் கொண்டுவருகிற திட்டங்களைச் செயல்படுத்துவதில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி மின்னல் வேகத்தில் செயல்படுகிறார். அவருடைய உழைப்பு மலைக்கவைக்கிறது. பள்ளிக் கல்வித் துறையில் அவர் செய்துவருகிற புதுமைகள் நம்மை வியப்பிலாழ்த்துகிறது. இன்று உலகில் முன்னேறிய நாடுகள் என்று சொல்லப்படுவதெல்லாம் அறிவின் பலத்தால், அறிவால் ஏற்பட்ட பொருளாதார பலத்தால் முன்னேறியவை தான். ‘தமிழ்நாட்டையும் அறிவின் பலத்தால் முன்னேறிய மாநிலமாக மாற்றுவதுதான் என் லட்சியம்’ என்று கூறியிருக்கிறார் முதலமைச்சர்.

ஒன்றிய அரசு மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் கல்விக்கான நிதியை ஒதுக்குவேன் என்று சொன்னபோது, ‘மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் கல்விக்கான நிதி கிடைக்குமென்றால் அந்த நிதியே எங்களுக்கு வேண்டாம். ஒன்றிய அரசின் நிதி இல்லாமலேயே தமிழ்நாட்டு மாணவர்களை எப்படிப் படிக்க வைக்க வேண்டும், எப்படிப் படிக்க வைக்க முடியும் என்பது எனக்குத் தெரியும்.ஒன்றிய அரசு தர வேண்டிய ரூ.2500 கோடிக்காக மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டதாக நான் கையெழுத்திட்டால், அது என்னுடைய சமூகத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னோக்கி இழுத்துச்சென்ற குற்றத்துக்கு நான் ஆளாவேன். அந்த பாவத்தை முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தன் வாழ்நாளில் ஒரு போதும் செய்ய மாட்டான்’ என்று அறிவித்தார்.

**அறிவுச் சமூகத்தை, அறிவியல் சமூகத்தை,அறிவு பொருளாதாரத்தை உருவாக்குவதற்காகச் செயல்படுகிற முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் செயல்பாடுகளைத் தமிழ்ச் சமூகம் உள்ளவரை நினைவில் வைத்திருக்கும். இப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கையில் இருப்பது ஆட்சி அதிகாரத்தின் செங்கோல் அல்ல. மானுட அறத்தின் மாபெரும் செங்கோல்.**